DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**O.S.No.108 of 2019**

Deposition of D.W.2 } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திருமதி. கோகிலா |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 26.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வட்டாட்சியர் எனக்கு

சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் வழங்கியுள்ளார். அந்த அனுமதி கடிதம் **Ex.X1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண் 292 சர்வே எண் 23/3பி சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கான உத்திரவு கோப்பு எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை. மேற்படி சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்ற கோப்பு எண் 8ஏ/39/1418 நாள் 14.11.2015 படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி சர்வே எண் நிலத்திற்கான அடங்கல் 1423 முதல் 1425 வரையிலான பசலி ஆண்டுகளுக்கான அடங்கல் மு.தங்கவேல் பெயரில் உள்ளது. பின்னிட்டு பசலி எண் 1426 முதல் 1435 வரை (நாளது தேதி வரை) சுந்தரம்மாள் பெயரில் அடங்கல் இருந்து வருகிறது. அந்த அடங்கலின் சான்றிட்ட நகல் **Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா மாற்றம் செய்யும் போது உரிமை ஆவணங்கள் அனுபவத்தை வைத்து விசாரித்து தான் செய்வோம்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எந்த எந்த ஆவணங்கள் அடிப்படையில் சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்ற கோப்பு எண் 8ஏ/39/1418 நாள் 14.11.2015 படி மாற்றம் செய்யப்பட்டது. அது சம்பந்தமாக என்ன விசாரணை செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

*2)*சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்றம் உரிய விசாரணை இல்லாமல் செய்யாததால் தான் நான் அந்த கோப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுந்தரம்மாள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ன என்ன ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது, என்ன விசாரணை செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. சுந்தரம்மாள் பெயரில் பசலி எந்த ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.